**டிசம்பர் - 31**

**"கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தை செலுத்துவேன்; இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்கு செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்கள் எல்லோருக்கும் முன்பாகவும் செலுத்துவேன். - சங் 116. 12-14.**

வரப்போகிற வருஷத்திற்காக புதுத்தீர்மானங்களை உண்டுபண்ண வருஷத்தின் முடிவு மிக நல்லதான சமயமாயிருக்கிறது. பிரியமான சகோதரரே, கர்த்தரோடுள்ள ஐக்கியத்தில் கிரியை நடப்பிக்கவும், பாடுபடவும் எவ்வளவு இஷ்டமுள்ளவர்களாயிருப்போம் என்பதற்காக ஏராளமான தீர்மானங்களை செய்வோமாக. அதன் பலனாக மிகப்பெரிய நம்பிக்கைகளையும் மிகப்பெரிய முயற்சிகளையும் கொண்ட வருஷமாகவும், கர்த்தருடைய கிருபையினாலே சுயதியாகத்திலும், உலகத்தையும் அதன் ஆவியையும், ஜெயிப்பதிலும், தன்னையும் மாம்சத்தின் ஆசைகளையும் தோற்கடிப்பதிலும், எதிராளியாக சாத்தானை எதிர்ப்பதிலும், நம்முடைய கர்த்தரை மகிமைப்படுத்துவதிலும், அவருடைய ஜனங்களை ஆசிர்வதிப்பதிலும், மிகப்பெரிய வெற்றியைக் காண, நம்முடைய ஜீவியத்தில் கிடைத்த வருஷங்கள் எல்லாவற்றையும்விட இந்த வருஷத்தைக் கர்த்தருடைய கிருபையினாலே, மிக உத்தமமான வருஷமாக ஆக்குவோமாக.

**- Z 99, 286 (R 2551).**

இப்பொழுது நமக்காக இருக்கிற கர்த்தருடைய உபகாரங்கள் அவருடைய சிருஷ்டிப்பு சம்பந்தமான, பராமரிப்பு சம்பந்தமான, மீட்பு சம்பந்தமான, போதனை சம்பந்தமான, நீதிமானாக்குதல் சம்பந்தமான, பரிசுத்தமாக்குதல் சம்பந்தமான, விடுதலை சம்பந்தமான ஆசிர்வாதங்கள், வரப்போகிற எதிர்காலத்தில் நமக்காகவுள்ள அவருடைய உபகாரங்கள் நாம் ராஜ்ஜியத்தை அடைவதிலும், குணத்திலும், சுபாவத்திலும், காட்சிகளிலும், கனத்திலும், இணக்கத்திலும், சுதந்திரத்திலும், உத்தியோகத்திலும், மையம் கொண்டிருக்கின்றன. அவருக்கு நாம் செலுத்துகிற முதலாவது காரியம் இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொள்ளுதல். பாத்திரம் சாதாரணமாக ஆசிர்வாதமுள்ள அனுபவங்களையும், அதிக தூக்கமான அனுபவங்களையும் அடையாளமாகக் காட்டுகிறது. இரட்சிப்பின் பாத்திரம் நாம் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்கிறது சம்பந்தமாக நமக்குக் கிடைக்கிற ஆசிர்வாதமுள்ள அனுபவங்களையும் குறிக்கிறது. ஆகையால், நாம் இப்படிப்பட்ட அனுபவங்களை நன்றியுள்ள, உயர்வாக மதிக்கிற இருதயத்தோடு ஏற்றுக்கொள்வோமாக. நமக்கு அவசியமான சமயத்தில் அவருடைய கிருபையையும், இரக்கத்தையும், சத்தியத்தையும், நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவோமாக. முடிவாக தனக்கும், உலகத்துக்கும் மரித்து, தேவனுக்கென்று பிழைத்திருப்போம் என்று நாம் செய்துகொண்ட பொதுவான பிரதிஷ்டையின் பொருத்தனையும், நம்முடைய பொதுவான பொருத்தனையோடு சேர்ந்த நம்முடைய விஷேச பொருத்தனையும், நாம் நிறைவேற்றுவோம். இம்மைக்கும், மறுமைக்குமுள்ள எல்லா தேவனுடைய ஜனங்களின் பிரயோஜனத்திற்காகவும் இதை இப்பொழுது செய்வோம். **- P 36, 167.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 51.12,13; 103.2,3; ஏசா 6.5-8; ரோம 12.1,2; 1கொரி 6.20; 2கொரி 5.14,15; சங் 23.5; லூக் 22.17,18,20; மத் 20.22,23 , 6.39,42; யோவா 18.11; எண் 15.2-5; உபா 23.21; யோனா 2.9; சங் 66.13,15.**

**கோபுர வாசிப்பு : Z 14, 279 (R 5538).**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதில் உதவியாக இருந்ததும் இடையூறாக இருந்ததும் எவை? அவை எதில் முடிந்தன?**